பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 04 | சனிக்கிழமை | 21.10.2023 | அதிர்வு 81

சீன விஜயத்தை முடித்துக்கொண்டு

## நாடு திரும்பினார் ஜனாதிபதி ரணில்



சீனாவுக்கான உத்தி யோகபூர்வ விஜயத்தை நிறைவு செய்து கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க நேற்றிரவு 04

### வைத்தியசாலை மீது குண்டு வீச்சு:

# காஸாவில் நடந்தவைதான் புதுக்குடியிருப்பிலும் நடந்தன

## இரட்டை வேடம் போடாதீர்கள்; சபையில் சுமந்திரன் காட்டம்



“முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன சில நாள்களுக்கு முன்னர் காஸா ஆஸ்பத் திரி மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து இன்று இந்தச் சபையில் உரையாற்றினார். நானும் கூட அதைக் கண்டித்தேன். 03



# ஐ.நாவை நம்பாதீர்கள்; அது பல்லிலாத பாம்பு!

## சபையில் மனோ விளாசல்

“காசாவில் நடக்கும் அநியாயத் தைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஐ.நா. சபையாக இருக்கலாம் அல்லது ஐ.நா. மனித உரிமை ஆணையகமாக இருக்கலாம் அவர்கள் பல்லில்லாத பாம்புகளாக இருக்கின்றார்கள். அவர் களுக்கு அதிகாரங்கள் இல்லை. சர்வ தேச சமூகம் என்று ஒரு சமூகம் இருக் கின்றது. அவர்களுக்கு நீதி, நேர்மை, நியாயம் என்று எதுவும் 02

# வைத்தியசாலையில் டயனா கமகே சேர்ப்பு



தாக்குதலுக்குள்ளானார் என்று தெரிவிக்கப்பட்ட இராஜாங்க அமைச்சர் டயனா கமகே வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப் பினர் சுஜித் பெரேரா தன்னைத் தாக்கினார் என்று இராஜாங்க அமைச்சர் டயனா கமகே நேற்றுப் பகல் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித் திருந்தார்.

நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள 04




தமிழ்த் தேசியக் கட் சிகளின் நேற்றைய கடையடைப்புத் திரு விழா அக்கட்சிகளைப் பொறுத்தவரை வெற்றி – தோல்வியின்றி ‘டிரா’வில் முடிந்த மாதிரிதான்.

எனினும் பல பாடங் களை அது அவர்களுக்குப் போதித்திருக் கும் என்பது நிச்சயம்.

தமிழர்கள் தங்கள் உரிமைக்காகப் போரா டுவதுதான் இப்போது தமிழர்களைப் பொறுத்த வரை அவர்களது பிரதான அரசியல். 02



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்த அரசியலில்தான் தமிழ்த் தேசியக் கட்சிகள் குளிர்காய்ந்து பிழைப்பு நடத்தி வருகின்றன. அதுதான் நிலைமை என்றால் அதற்கான போராட்டத் தளத்தில் தமிழ் மக்களை – தனது வாக்காளர்களை – வைத்திருப்பது தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலையாய பொறுப்பு.

தமது மக்களை அந்தத் தளத்தில் பேணாமல் தமிழ்க் கட்சிகள் அரசியல் பிழைப்பு நடத்தி வந்ததன் நிலைமை தான் – விளைவுதான் – நேற்றைய பொது முடக்கத்தில் பிரதிபலித்திருக்கின்றது.

தமது இந்தப் போராட்ட அறிவிப்பில் உள்ள தவறைப் பற்றி ஆராயாமல், இந்தப் போராட்ட அறிவிப்புக்கு எதிராக ஊடகவியலாளர்கள், அரசியல் விமர்சகர்கள், அவர்களின் ஊடக நிறுவனங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து விட்டனர் என்று கருதி, அது எப்படி, எங்ஙனம் சாத்தியமாயிற்று என்று துருவிக் கொண்டிருக்கிறார் தமிழ் கட்சி ஒன்றின் தலைவர் எனக் கேள்வி.

மக்களின் மனநிலை பற்றிய பிரக்ஞையேயின்றி, இத்தகைய போராட்டத்தை 'எடுத்தோம், கவிழ்த்தோம்' என அறிவித்த தமிழ் கட்சிகள், தாங்களாகவே புதை சேற்றுக்குள் காலை விட்டு விட்டு, அவஸ்தையைப் பின்னர்தான் உணர்ந்தன. விழுந்தும் மீசையில் மண் ஒட்டாத மாதிரியாவது அறிவித்த பொது முடக்கத்தை ஒப்பேற்றிக் காட்டுவதற்கு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் தலையால் கிடங்கு கிண்டுவது போல கடைசி நேரத்தில் முயற்சித்தமை குறிப்பிடப்பட வேண்டியது.

ஆனால் இலங்கைத் தமிழரசுக் கட்சிதான் பிரசார விடயத்தில் வடக்கில் 'டல்'லாக – 'டக்'காக – நடந்து கொண்டது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டு பிசுபிசுத்து போன மனித சங்கிலிப் போராட்டத்திற்கு தமிழரசு கட்சியின் வடக்கு தரப்பு ஓரளவாவது முன்னின்று செயல்பட முனைந்தது. கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி. கே.சிவஞானத்தின் அழைப்பில், கட்சியின் கணிசமான பிரமுகர்கள் – தத்தமது ஆதரவாளர்கள், தொண்டர்களைக் கூட்டி வராத போதும் – தாங்கள் மட்டுமாவது யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில், உப்புமடம் சந்தியில் மனித சங்கிலிக் காகப் பிரசன்னமாகி இருந்தனர்.

ஆனால் நேற்றைய பொது முடக்கத்திற்கான பிரசாரத்தில் கட்சித் தலைவர் மாவையும் மகனும்தான் ஆங்காங்கே தலைகாட்டினர். ஏனையோர் எல்லோரும் மிஸ்ஸிங்.

நேற்றைய பொதுமுடக்கம் சோடை போனமைக்கான பிரதான காரணங்களில் ஒன்று பாடசாலைகளில் தவணைப் பரீட்சை நடைபெற்ற சமயத்தில் அதை முன்னெடுக்க ஒற்றைக்காலில் நின்றமைதான். அந்தப் பரீட்சைகளை ஒத்தி வைக்கும்படி கோரி, எந்த அரசியல் கட்சியின் மூத்த தலைவர்களும் கல்வித் துறையில் உயரதிகாரிகள் எவரையும் நேரில் நாடவோ, கடிதம் மூலம் பெயர் குறிப்பிட்டு விண்ணப்பித்துக் கோரவோ இல்லையாம். எல்லாம் பத்திரிகை அறிக்கையோடு முடிந்து விட்டதாம். தாங்கள் விடும் பத்திரிகை அறிக்கையைப் பார்த்து, பரீட்சையைக் கல்வி அதிகாரிகள் ஒத்தி வைப்பார்கள் என்ற நம்பிக்கை நம் தலைவர்களுக்கு.

சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகளுடன், அதிகாரப் பதவி நிலையில் இருக்கும் இரண்டு அரசியல்வாதிகளாவது கடிதத்திலும், நேரிலும் தொடர்பு கொண்டிருந்தால், நேற்றைய பாடப் பரீட்சைகள் பிறிதொரு தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கும் என்று விடயமறிந்த கல்வி நிர்வாக வட்டாரம் ஒன்று தகவல் வெளியிட்டது.

ஊடக அறிக்கையில் அரசியல் பிழைப்பு நடத்தும் நம் அரசியல் தலைவர்கள், அதை விட்டு வெளியே வராமல், அதிலேயே குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டும் மனநிலையில் இருந்து விட்டார்கள்.

இனியாவது தங்களை செயற்றிறன் மிக்க வகையில் அவர்கள் மாற்றிக் கொள்வதுதான் அவர்களுக்கும் வெற்றி தரும். மக்களுக்கும் சரியான வழிகாட்டுதல் வழங்கப்பட வாய்ப்புக் கிடைக்கும்.

நேற்றைய பாடத்துடன் அவர்கள் திருந்துவார்கள் என எதிர்பார்ப்போம்.

## ஐ.நாவை நம்பாதீர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிடையாது. இலங்கையிலும் அப்படித்தான். இலங்கையில் நிகழ்ந்த யுத்தம் சாட்சியமில்லாத யுத்தமாகும். அதுதான் உண்மை. பலஸ்தீனத்துக்கு ஒரு நியாயம், இலங்கைக்கு வேறு நியாயம் இருக்க முடியாது."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இஸ்ரேல் – பலஸ்தீன மோதல், பூகோள தாக்கம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"இந்தச் சந்தர்ப்பத்திலே, காசாவில், மேற்குக் கரையில் நிகழக்கூடிய அடாவடி யுத்தத்தால், சண்டையால், சச்சரவால் உயிர்களை இழந்து, அவயங்களை இழந்து துன்பப்படும் அப்பாவி மக்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல், காசாவில் இருந்து போராளிகளால் தாக்கப்பட்ட, உயிர்களை இழந்து, அவயங்களை இழந்த இஸ்ரேலின் தென் பகுதியில் வாழும் மக்களுக்கும், கடத்தப்பட்ட மக்களின் குடும்பங்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சண்டை முழுமையான யுத்தம் அல்ல. யுத்தம் என்றால் பல்வேறு சண்டைகளின் தொகுப்பு ஆகும். ஆகவே, இந்தச் சண்டை என்பது அனைத்துக்கும் ஆரம்பம் அல்ல. இந்தச் சண்டை என்பது அனைத்துக்கும் ஆரம்பம் அல்ல. இது ஆக ஹமாஸ் போராளிகளால் ஆரம்பிக்கப்பட்ட சண்டை அல்ல. அதனால், தென் இஸ்ரேலில் குடியேற்றப்பட்டுள்ள மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். படையினரும் கொல்லப்பட்டார்கள். பலர் கடத்தப்பட்டார்கள்.

ஆனால், அதை ஆரம்பம் அல்ல.

இந்த யுத்தம் நீண்ட நெடுங்காலமான பலஸ்தீன மக்கள் மீதான இஸ்ரேலின் அடாவடி ஆக்கிரமிப்பு காரணமாகத் தான் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. இதற்கான மூல காரணம் பலஸ்தீன சகோதரர்களின் மீதான் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பே ஆகும். இதை உலகம் ஏற்றுக்கொண்டுள்ளது. நாமும் ஏற்றுக் கொண்டுள்ளோம். ஆகவே, நாமல் ராஜபக்ஷ இந்தச் சபையில் சொன்னதைப் போன்று இந்தப் பிரச்சினையின் அடிப்படை காரணம் கண்டறியப்பட வேண்டும்.

பாருங்கள், நேற்று முதல்நாள், காசாவில் மருத்துவமனையின் மீது குண்டுகள் விழுந்தன. பாடசாலையின் மீது குண்டுகள் விழுந்தன. மக்கள் குடியிருப்புகளின் மீதும் குண்டுகள் விழுந்தன.

இதேதான் இலங்கையிலும் நிகழ்ந்தது. இலங்கையிலும் அப்படித்தான். வடக்கு – கிழக்கில் யுத்தத்தின் போது, மருத்துவமனைகள் மீதும் குண்டுகள் விழுந்தன. அப்படித்தான் காசாவிலும் விழுகின்றன. வடக்கு, கிழக்கில் பாடசாலைகளின் மீது குண்டுகள் விழுந்தன. அப்படித்தான் காசாவிலும் விழுகின்றன.

இலங்கையில் வடக்கு, கிழக்கில் யுத்தத்தின் போது, மக்கள் வாழும் குடியிருப்புகளின் மீது குண்டுகள் விழுந்தன. அப்படித்தான் காசாவிலும் விழுகின்றன.

யுத்தம் தீர்வல்ல. அதற்குக் காரணம் யாராகவும் இருக்கலாம். ஆனால், யுத்தம் தீர்வல்ல. அப்பாவி மக்கள் கொல்லப்படுவதை நாம் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. ஆகவே, தீர்வு காணப்பட மூலகாரணம் கண்டறியப்பட வேண்டும்.

இன்று, இவற்றைப் பார்த்துக்கொண்டிருக்கும் ஐ.நா. சபையாக இருக்கலாம் அல்லது ஐ.நா. மனித உரிமை ஆணையகமாக இருக்கலாம் அவர்கள் பல்லில்லாத பாம்புகளாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு அதிகாரங்கள் இல்லை. இலங்கையிலும் அப்படித்தான். இலங்கையில் நிகழ்ந்த யுத்தம் சாட்சியமில்லாத யுத்தமாகும். அதுதான் உண்மை.

இன்று ஐ.நா. நிபுணர்களால் அங்கு அரபு நாட்டிலே, பலஸ்தீன யுத்தத்தைப் பார்த்து அறியக்கூடியதாக இருந்தாலும், இலங்கையில் அப்படியும் இருக்கவில்லை. அப்படி பார்த்து இருந்தாலும் கூட, அவர்களுக்கு பல்லில்லை. சர்வதேச சமூகம் என்று ஒரு சமூகம் இருக்கின்றது. அவர்களுக்கு நீதி, நேர்மை, நியாயம் என்று எதுவும் கிடையாது. ஆக, அவர்களுக்கு தத்தம் தேசிய நலன்கள்– தான் இருக்கின்றன. அமெரிக்காவாக இருக்கலாம். இந்தியாவாக இருக்கலாம். ஐரோப்பாவாக இருக்கலாம். அவர்களுக்கு அவர்களின் தேசிய நலன்தான்.

ஐ.நா. சபையைப் பொறுத்தவரையிலே இலங்கையில் நடந்த யுத்தத்தில் 40 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டதாக, அவர்களது உள்ளக அறிக்கையில் சொல்லப்பட்டதாக நான் அறிந்தேன். தமிழ்த் தரப்பைப் பொறுத்தவரையிலே ஒரு இலட்சத்துக்கும் மேல் மக்கள் கொல்லப்பட்டனர் என்று கூறப்படுகின்றது. இதன்மூலம் ஐ.நா. சபை பாடம் படித்து

(3ஆம் பக்கம் பார்க்க...)

## ஐ.நாவை நம்பாதீர்கள்...

(3 பக்கத் தொடர்ச்சி...)

கொண்டதாகக் கூட அவர்களது உள்ளக அறிக்கையில் சொல்லப்பட்டதாக நான் அறிந்தேன்.

ஆனால், ஐ.நா. பாடம் படிக்கவில்லை. பாடம் படித்து இருந்தால், காசாவில் இந்த அநியாயம் நடக்காது. மேற்கு கரையில் இந்த அநியாயம் நடக்காது. பாடம் படித்து இருந்தால், இந்த அநியாயம் நடக்காது. பெண்கள், குழந்தைகள் இப்படிக் கொல லப்பட மாட்டார்கள். ஆகவே, சர்வதேச சமூகம் அல்ல, ஐ.நா. சபை அல்ல, நாங்கள்தான் பாடம் படிக்க வேண்டும். ஐ.நாவோ, சர்வதேச சமூகமோ எங்களைக் காப்பற்ற வராது. இந்நாட்டுக்குள் நாம் தான்எம்மைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும் என்ற முடிவுக்கு நாம் வர வேண்டும்.

இன்று இந்தச் சபையில், அப்பாவி பலஸ்தீன மக்களுக்காக குரல் எழுப்பிய, அரசு தரப்பு, எதிர்த்தரப்பு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நான் ஒன்று சொல்லி வைக்க விரும்புகின்றேன். இதே நிகழ்வுகள்தான் இலங்கையிலும் நிகழ்ந்தன. பலஸ்தீன பிரச்சினைக்குத் தீர்வாக இன்று, இரண்டு நாடுகள் என்ற தீர்வு இருக்க வேண்டும் என நாம் கூறுகின்றோம். 1967ஆம் ஆண்டுக்கு முன் இருந்த நிலப்பகுதிக்கு இஸ்ரேல் வாபஸ் வாங்க வேண்டும். கிழக்கு ஜெருசலத்தை தலைநகராகக் கொண்டு சுதந்திர பலஸ்தீன நாடு உருவாக வேண்டும். அதை இஸ்ரேல் அங்கீகரிக்க வேண்டும். அதே போல், இஸ்ரேல் நாட்டையும், இருப்பையும் பலஸ்தீன நாடு அங்கீகரிக்க வேண்டும். இதுதான் அங்கே தீர்வு.

இலங்கையிலும் மீண்டும் யுத்தம் நிகழ வேண்டாம் என்றால், பிரச்சினை தீர வேண்டும் என்றால், சிங்களவர்களும், தமிழர்களும், ஒற்றுமையாக வாழ வேண்டும் என்றால், பலஸ்தீனத்துக்கு ஒரு நியாயம், இலங்கைக்கு வேறு நியாயம் இருக்க முடியாது.

இலங்கையில் இன்று தனிநாடு கோரிக்கை காணாமல் போய் விட்டது. ஆகவே, ஒரே இலங்கைக்குள் தமிழர்களுக்கு நியாயமான சுயாட்சி வழங்குவதை சிங்களவர்கள் அங்கீகரிக்க வேண்டும். இங்கே வந்து பலஸ்தீனத்துக்கு அனுதாபம் தெரிவிப்பது உண்மையாக இருந்தால், இதை நீங்கள் செய்ய வேண்டும். அதுதான் நியாயம்." – என்றார்.

## காஸாவில் நடந்தவை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால், காஸா வைத்தியசாலை மீது நடத்தப்பட்ட குண்டு வீச்சைக் கண்டித்த மைத்திரிபால சிறிசேன, புதுக்குடியிருப்பில் வைத்தியசாலை குண்டு வீசித் தாக்கப்பட்ட போது அச்சமயத்தில் பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர், இதுவரை அதைக் கண்டிக்கவில்லை. இந்த நாடாளுமன்றத்தில் நடக்கின்ற இந்த விவாதத்திலேயே இந்தப் பாசாங்கு நடிப்புத்தனத்தை – அதன் உச்சத்தை – எங்களால் காண முடிகின்றது."

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இஸ்ரேல் – பலஸ்தீன மோதல், பூகோள தாக்கம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"உலகின் மனச்சாட்சியை அதிர்ச்சியில் ஆழ்த்திய ஒரு விடயம் பற்றி நான் இப்போது பேசுகின்றேன். இங்கு நான் பேசிக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் கூட, மிக மோசமான வன்முறைகள், பேரழிவுகள், கண்மூடித்தனமான படுகொலைகள் ஆகியவற்றைச் சந்தித்துக் கொண்டிருக்கும் ஒரு மக்கள் கூட்டத்துக்கான எங்கள் ஆதரவை வெளிப்படுத்தி நான் இந்த உரையைத் தொடங்குகின்றேன்.

அளவற்ற மனிதாபிமானப் பேரழிவு மிக மோசமாக ஏற்பட்டிருப்பது பற்றிய படங்கள், செய்திகளை நாம் நேரடியாக அவதானிக்கும் இந்நிலையில், நாங்கள் சிறிய நாடாக இருந்தாலும் அது தொடர்பில் நாம் அமைதியாகப் பார்த்திருக்க முடியாது. துயரதில் – துன்பத்தில் – மூழ்கியிருக்கும் அந்த மக்களுக்காக நாங்கள் கட்டாயம் குரல் எழுப்ப வேண்டும்.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான அரசியல் பிரச்சினை கடும் சிக்கலானது. அது எங்கள் அனைவருக்கும் தெரியும். அந்த அரசியல் பிரச்சினை தொடர்பாக இருதரப்பு நியாயங்களையோ அவர்களுடைய வாதங்கள் பற்றியோ நான் இங்கு எதுவும் பேசப் போவதில்லை. இது அதற்கான நேரமும் அல்ல. ஆனால், வன்முறையில் ஈடுபடுபவர்களைக் கண்டிக்கவும், யுத்தத்தை மக்கள் மீது ஏவி விட்டுப் பேரழிவைத் தூண்டுவோரை அதை நிறுத்துமாறும், வன்முறையை முடிவுக்குக் கொண்டு வருமாறு நாங்கள் வற்புறுத்த வேண்டிய வேளை இது.

நீண்ட காலம் வன்முறைகள் திணிக்கப்பட்டமையால் தொடர்ந்து பேரழிவுகளையும் துன்பங்களையும் சந்தித்த ஒரு மக்கள் கூட்டத்தின் சார்பில் நான் இங்கு உரையாற்றுகின்றேன்.

வன்முறைகள் இழைக்கப்படும் போது அதை யார் செய்தார்கள் என்பது முதலில் முக்கிய விடயம் அல்ல. அத்தகைய நாச வேலை செய்கின்ற சூத்திரதாரிகள் அடையாளம் காணப்பட வேண்டும். ஆனால், நான் இங்கு வலியுறுத்துவது முதலில் மக்களின் நெருக்கடிகள், சிக்கல்கள், துன்பங்கள் உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும், விரைந்து கொண்டுவரப்பட வேண்டும் என்பதுதான்.

அந்த யுத்தத்தை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். யுத்த நிறுத்தத்தை நடைமுறைப்படுத்தச் செய்ய வேண்டும்.

மக்கள் கூட்டத்தினர் அல்லது நாடுகள்தங்களுடைய வேறுபாடுகளை – முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்ள வன்முறையை நாடுகின்ற முறையில் செயற்படுவார்களானால் நாங்கள் ஒரு நாகரிக உலகத்தில் வாழ்பவர்கள் என்று எப்படிக் கூற முடியும்? அப்படிப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இருந்திருக்கக் கூடும். இப்போதல்ல.

பிணக்குகள், முரண்பாடுகள் எவ்வளவு தீவிரமாக – மோசமாக – இருந்தாலும் அவை பேச்சு மூலம், இடை ஏற்பாட்டாளர்கள் மூலம், சமரச முயற்சிகள் மூலம் தீர்க்கப்பட வேண்டும். வன்முறை மூலமோ, ஒருவரை ஒருவர் கொல்வதன் மூலமோ அல்ல. ஆனால், நாங்கள் பார்க்கும் உலகில் நிலைமை அப்படியல்ல. தொடர்ந்து வன்முறைகள் நீடிக்கின்றன. பல நாடுகளில் இத்தகைய வன்முறைகளும் யுத்தங்களும் தொடர்கின்றன. அதை நாங்கள் பார்க்கின்றோம். உக்ரைன் யுத்தம் பார்த்தோம். இப்போது மத்திய கிழக்கில் பார்க்கின்றோம்.

மத்திய கிழக்கில் இப்போது கட்டவிழும் விடயங்கள், 15 ஆண்டுகளுக்கு முன்னர் வரை சுமார் மூன்று தசாப்த காலம் எங்கள் மீது கட்டவிழ்ந்த விடயங்களோடு எவ்வளவு தூரம் ஒன்றுபட்டவையாக – ஒரே மாதிரியாக – இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

எனக்கு முன்னர் இங்கு பேசிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சில நாள்களுக்கு முன்னர் காஸா ஆஸ்பத்திரி மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து உரையாற்றினார். நானும் கூட அதைக் கண்டித்தேன். யார் அதற்குப் பொறுப்பு என்பதற்கு அப்பால், அதைக் கடந்து நாங்கள் கண்டித்தோம். அந்த வைத்தியசாலை தாக்கப்பட்ட போது ஒரு முக்கிய விடயம் இடம்பெற்றது. அந்த வைத்தியசாலை மனித கேடயமாகப் பயன்படுத்தப்பட்டதாக இஸ்ரேலினுடைய உத்தியோகபூர்வ பிரதிபலிப்பு உடனடியாக அமைந்தது. அத்தோடு பயங்கரவாதிகள் அங்கிருந்து தாக்குகின்றார்கள் என்றும் கூறப்பட்டது. இப்போது வேறு விதமான கருத்துக்களும் வெளிப்படுகின்றன. அந்தக் குண்டு வீச்சு இஸ்ரேலால் நடத்தப்படாமல் இருக்கக்கூடும் என்றும் கூறப்படுகின்றது. ஆனால், எங்களுக்கு எதுவும் தெரியாது. யார் செய்தார்கள் என்பது முக்கியமல்ல. நான் இங்கு குறிப்பிட வருவது வேறு ஒரு விவகாரம்.

அத்தகைய சம்பவம் நடந்த கையோடு இஸ்ரேல் அரச கட்டமைப்பு அது மனித கேடயமாகப் பயன்படுத்தப்பட்டது என்ற விளக்கத்தை விழுந்தடித்துக் கொண்டு தரத் தயாராக இருந்தது. இவ்விடத்தில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் என்ன நடந்தது என்பதை மறைத்து நாங்கள் தப்பி விட முடியாது. அதைத்தான் (இஸ்ரேல் அரசு இப்போது கூறியதைத் தான்) இங்கும் இந்த அரசும் கூறியது.

மத்திய கிழக்கில் இரண்டொரு தினங்களுக்கு முன்னர் வைத்தியசாலை மீது நடத்தப்பட்ட குண்டு வீச்சைக் கண்டித்த மைத்திரிபால சிறிசேன, புதுக்குடியிருப்பில் வைத்தியசாலை குண்டு வீசித் தாக்கப்பட்ட போது அச்சமயத்தில் பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர், இதுவரை அதைக் கண்டிக்கவில்லை.

இந்த நாடாளுமன்றத்தில் நடக்கின்ற இந்த விவாதத்திலேயே இந்தப் பாசாங்கு நடிப்புத்தனத்தை – அதன் உச்சத்தை – எங்களால் காண முடிகின்றது.

மத்திய கிழக்கில் இரண்டு தேசங்கள் என்ற தீர்வைப் பற்றி இங்கு – இந்த நாடாளுமன்றத்தில் – பலரும் பேசுகின்றார்கள். ஆனால் இங்கு – இந்த நாட்டில் – அவர்களுக்கு அந்த விடயம் வெறுக்கப்பட்ட விவகாரமாக இருக்கின்றது.

இங்கு அடுத்தடுத்து, வரிசையாகப் பேசிய ஒவ்வொருவரும் ஐ.நா. பற்றிக் குறிப்பிடுகின்றார்கள். இவ்விடயத்தில் ஐ.நா. தீர்மானங்கள் பற்றி வலியுறுத்துகிறார்கள். ஆனால், இங்கு – இந்த நாட்டில் – ஐ.நா. வரக்கூடாது, ஐ.நா. பங்களிப்புக்கு எதுவும் இல்லை, அதற்கு

(4ஆம் பக்கம் பார்க்க...)

# ஆதிவாசி குழுவினர் முதல் தடவையாக யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வருகை!



மஹியங்கனையில் வசித்துவரும் ஆதிவாசிகள் முதல் தடவையாக யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இன்று வரவுள்ளனர்.

ஆதிவாசிகளின் தலைவர் ஊரு வரிகே வன்னில அத்தோவின் தலைமையிலான 60 ஆதிவாசிகள் குழுவினரே முதல் தடவையாக யாழ்ப்பாணத்திற்கு இன்று மற்றும் நாளை என இரண்டு நாள்கள் சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணத்திற்கு தாம் செல்லும் முதல் பயணமாக இது அமைகிறது எனவும் இரண்டு நாள்களும் யாழ்ப்பாணத்திலுள்ள பிரசித்தி பெற்ற இடங்களை சுற்றி பார்வையிட்டு மீண்டும் தமது இருப்பிடமான மஹியங்கனைக்கு செல்லவுள்ளோம் எனவும் ஆதிவாசிகளின் தலைவர் தெரிவித்துள்ளார்.

## காஸாவில் நடந்தவை..

(3ஆம் பக்கத் தொடர்ச்சி..)

இடமில்லை என்று கூறுகின்றார்கள். ஐ.நா. தள்ளி நீக்க வேண்டும் என்று சத்தமிடுகின்றார்கள்.

இந்தவிவாதத்தையொட்டிஅரசபயங்கரவாதம் குறித்து கடுமையான கண்டனங்கள் இங்கு கூறப்படுகின்றன. நானும் எனது குரலை அவர்களோடு சேர்ந்து கண்டனத்துக்காக ஒலிக்கின்றேன். ஆம். அது அரச பயங்கரவாதம்தான். அப்படியானால் இங்கு என்ன நடந்தது? இங்கும் அதுதானே – அரச பயங்கரவாதம் தானே – நடைபெற்றது. அதுதான் இங்குள்ள பாசாங்குத்தனம். இரட்டை வேடப் போக்கு.

மக்கள் மீது – மக்கள் கூட்டத்தின் மீது – பெரும் எடுப்பில் கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்துபவர்களைக் கண்டிக்க வேண்டும். நான் முழுமையாகக் கண்டிக்கின்றேன். அது ஹமாஸாக இருந்தாலும், இஸ்ரேல் நாடாக இருந்தாலும், யாராக இருந்தாலும் அது கண்டிக்கப்பட வேண்டும்.

நீங்கள் ஒரு நாடாக, ஒரு நாட்டின் அங்கீகரிக்கப்பட்ட ஒரு அரசாக இருந்தாலும் மக்கள் மீது வான்வழித் தாக்குதல்களை நடத்தி பெரும் உயிரிழப்புகளை ஏற்படுத்துவதற்கு உங்களுக்கு – யாருக்கும் – உரிமை கிடையாது. உங்களுக்கு யாரும் அத்தகைய உரிமையைத் தரவில்லை. அத்தகைய தாக்குதலை நடத்துவதற்கான ஆயுதங்கள் உங்களிடம் இருக்கின்றன என்பதற்காக, நீங்கள் ஓர் அரசு என்பதற்காக, நீங்கள் அதற்கான ஆயுதங்களை சுவீகரிக்க முடியும் என்பதற்காக, ஏனைய நாடுகள் உங்களை பாதுகாக்கின்றன என்பதற்காக, எந்த நாடும் அல்லது எந்த நாடு அல்லாத ஒரு கட்டமைப்பும் கூட, இவ்வாறு மக்களைக் கொன்றொழிப்பதற்கு எந்த உரித்தும் கிடையாது.

இங்குதான் உங்களின் பாசாங்குத்தனம் – இரட்டை வேடம் – அம்பலப்படுத்தப்படுகின்றது. உங்கள் சொந்த நாட்டில் நடந்ததை மன்னிப்பது போல் அனுமதித்துக் கொண்டு, கண்டிக்காமல் இருந்தபடி, பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் நடக்கும் இது போன்ற விடயத்தை நீங்கள் கண்டிப்பது வேடிக்கையானது. நீங்கள் அதை எவ்வாறு செய்ய முடியும்?

அப்படி விடயங்கள் நடப்பதற்கு நீங்கள் அவற்றை அனுமதித்தீர்கள். இடமளித்தீர்கள். அவற்றை மெச்சி கௌரவப்படுத்தினீர்கள் கொண்டாடினீர்கள். அதிலிருந்து பெருமிதம் கொண்டீர்கள். அதை ஒரு சீரியஸான விடயமாக நீங்கள் கருதவில்லை. இது இரட்டை வேடம். இரட்டை நாக்கு போக்கு.

மக்களினுடைய துயரங்கள், கஷ்டங்கள் நீக்கப்பட வேண்டும். இஸ்ரேல் – பலஸ்தீனப் பிணக்கு ஓர் அரசியல் பிரச்சினை அது அரசியல் ரீதியாகவே தீர்க்கப்பட வேண்டும். ஏனைய நாடுகளில் உள்ள இதுபோன்ற பல பிணக்குகளும் அவ்வாறுதான் தீர்க்கப்பட வேண்டும். அவை நாடுகளுக்கு இடையிலான – மக்கள் கூட்டங்களுக்கு இடையிலான – அரசியல் பிணக்குகள், முரண்பாடுகள். அவை அரசியல் ரீதியாகத்தான் தீர்க்கப்பட வேண்டும்.

இலங்கையில் உள்ள பிணக்கும் ஓர் அரசியல் பிரச்சினைதான். அது அதுவும் அரசியல் ரீதியாகத்தான் தீர்க்கப்பட வேண்டும்.

அரசியல் பிரச்சினைக்கு இராணுவம் தீர்வு இல்லை என்று அன்றைய தினம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியமையை நாங்கள் செவிமடுத்தோம். இப்போது பலஸ்தீன – இஸ்ரேல் பிரச்சினையையொட்டி அவர் அதனைக் கூறுகின்றார். ஆனால், எங்கள் நாட்டில் ஓர் அரசியல் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை முன்வைத்து, யுத்தத்தை ஏவிவிட்டு, அதைக் கொண்டு நடத்திய ஜனாதிபதி அவர்தான்.

ஆகவே, இவ்வளவுக்குமாக நாட்டை மட்டும் நான் தனித்துக் குற்றம் சுமத்த விரும்பவில்லை.

நாகரிக உலகில் வன்முறைக்கும் பேரழிவுகளுக்கும் இடமில்லை. வன்முறையை யார் முன்னெடுத்தாலும் அவர்கள் முழு அளவில் – வெளிப்படையாகவே – கண்டிக்கப்பட வேண்டியவர்கள். கண்டிக்கப்பட வேண்டும்.

இன்று நாங்கள் துன்ப, துயரங்களை – நெருக்கடிகளை – எதிர்கொண்டிருக்கும் மக்களோடு எங்கள் உணர்வுகளை ஒன்றுபடுத்தி அவர்களுக்காக ஆதரவு தெரிவிக்கின்றோம்.

குழந்தைகளை, சிறுவர்களைக் கொன்றழித்து, மக்களை பழிவாங்குகின்ற இத்தகைய வன்முறைகள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை.

வன்முறையின் மோசமான விளைவுகளால் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கும் மக்களுக்காக நாங்கள் குரல் எழுப்புவோம். வன்முறை ஹமாஸால் முன்னெடுக்கப்பட்டாலும், இஸ்ரேல் நாட்டால் முன்னெடுக்கப்பட்டாலும், பாதிக்கப்பட்ட மக்களுக்காக நாங்கள் குரல் எழுப்புவோம்.

மத்திய கிழக்கிலும் முழு உலகிலும் அமைதி நிலவ – சமாதானம் ஏற்படப் பிரார்த்திப்போம்." – என்றார்.

## நாடு திரும்பினார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நாடு திரும்பினார்.

சீனாவில் நடைபெற்ற "ஒரே மண்டலம் ஒரே பாதை" திட்டத்தின் மூன்றாவது சர்வதேச ஒத்துழைப்புக்கான மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ரணில் விக்கிரமசிங்க கடந்த 15ஆம் திகதி அங்கு பயணமாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வைத்தியசாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நூலகத்துக்கு அருகாமையில் வைத்து தன்னை சுஜித் பெரேரா எம்.பி. தாக்கினார் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அதையடுத்துப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றையும் அவர் பதிவு செய்தார். அதன்பின்னர் ஸ்ரீஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் நேற்று மாலை அவர் சேர்க்கப்பட்டார்.

அத்துடன், இந்தத் தாக்குதல் சம்பவத்தால் நாடாளுமன்ற அமர்வு 10 நிமிடங்கள் வரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கத்து.

# மயிலத்தமடு மேய்ச்சல் தரையில் அத்துமீறிய குடியேற்றவாசிகளை வெளியேற்றுமாறு பொலிஸாருக்கு அறிவித்தல் வரவில்லையாம்!

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஊடகப் பேச்சாளர் சுகாஸ் தெரிவிப்பு












(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மேய்ச்சல் தரைப் பகுதியில் அத்துமீறி குடியேறிய சிங்களவர்களை வெளியேற்றுவது தொடர்பாக இதுவரை ஜனாதிபதியிடமிருந்து எது விதமான அறிவித்தலும் வரவில்லை என கரடியனாறு பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார் எனவும், ஆகவே, எதற்காக மக்களை ஏமாற்றுகின்றீர்கள், ஏன் பொய்களை கூறுகின்றீர்கள் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரும் சட்டத்தரணியுமான க.சுகாஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மயிலத்தமடு – மாதவனை மேய்ச்சல் தரைப் பண்ணையாளர்களின் 36 ஆவது நாள் உண்ணாவிரதப் போராட்டத்தில் நேற்று வெள்ளிக்கிழமை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் ஊடகப் பேச்சாளரும் சட்டத்தரணியுமான சுகாஸ், தேசிய அமைப்பாளர் த.சுரேஸ் ஆகியோர் பங்கேற்றுக் கொண்டமையுடன், பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்குச் சென்ற பேது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு, மயிலத்தமடு தமிழ்ப் பண்ணையாளர்களின் வாடியில் இருந்த உடைமைகள் கடந்த 13 ஆம் திகதி எரிக்கப்பட்டமையுடன் இதுவரை ஆயிரத்துக்கு அதிகமான மாடுகள் கொல்லப்பட்டுள்ளன. இந்த நிலையில் வாடியில் உடைமைகள் எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் பாதிக்கப்பட்ட பண்ணையாளரை விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தனர். அவரை அழைத்துக் கொண்டு கரடியனாறு பொலிஸ் நிலையத்துக்கு சமூகமளித்திருந்தோம். இந்த விடயம் நடைபெற்று இன்றுவரை ஒரு சந்தேக நபர் கூட கைது செய்யப்படவில்லை.

இந்த நிலையில் கரடியனாறு பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் மயிலத்தமடு மேய்ச்சல் தரையில் இருந்து அத்துமீறிய சிங்கள குடியேற்றவாசிகளை வெளியேற்றுமாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளமை தொடர்பாக ப் பேசியிருந்தேன். அப்போது அவர் ஜனாதிபதியிடமிருந்து இது தொடர்பில் எந்தவிதமான அறிவிறுத்தலும் வந்திருக்கவில்லை எனத் தெரிவித்தார்.

ஆகவே, இந்த சாதாரண விடயத்துக்குக் கூட இதுவரை நீதி கிடைக்கவில்லை. எனவே அரசாங்கத்துடன் ஒட்டிக்கொண்டிருக்கும் பிள்ளையான், கருணா, வியாழேந்திரன், அங்கஜன், டக்ளஸ் போன்றவர்களே! இந்தப் பிரச்சினையைக் கூடத் தீர்க்கமுடியாத நீங்கள்தான் யாழ்ப்பாணத்தையும் மட்டக்களப்பையும் சிங்கபூராக மாற்றப் போகின்றீர்களா?

எனவே எதற்காக மக்களை ஏமாற்றுகின்றீர்கள்? ஏன் பொய்களைக் கூறுகின்றீர்கள்?

இந்தக் கால்நடைவளர்ப்பாளர்களான பண்ணையாளர்கள் அப்பாவிகள். இந்தப் பண்ணையாளர்களுக்கு நீதி கிடைக்கும்வரை நாங்கள் குரல்கொடுத்துக் கொண்டிருப்போம். ஓயப்போவதில்லை. –என்றார்.

# பொலிஸார் எனக் கூறி பொதுமக்களை ஏமாற்றிப் பணம் பறித்த கும்பல் கைது!

–எஸ்.நிதர்ஷன்–

பொலிஸார் எனக்கூறி பொது மக்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் கும்பலொன்றை யாழ் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் மடக்கிப் பிடித்துள்ளனர்.

யாழ் நகரிலும் நகரை அண்மித்த பல இடங்களிலும் பொது மக்கள் நடமாட்டம் இல்லாத நேரங்களில் இவ்வாறு பணம் பறிக்கும் சம்பவங்கள் அண்மையில் இம்பெற்றிருக்கின்றன.

குறிப்பாக நல்லூர், கந்தர்மடம், கலட்டி இலுப்பையடி போன்ற இடங்களில் பாடசாலை மாணவர்களையும் வீதியால் பயணிப்பவர்களையும் இலக்கு வைத்துப் பணம் பறிக்கின்ற செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டையடுத்து பல்வேறு கோணங்களில் தீவிர விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்திருந்தனர்.

இதற்கமைய பொலிஸாரின் தீவிர விசாரணையின் போது பணம் பறித்த கும்பலொன்றைப் பொலிஸார் மடக்கிப் பிடித்துக் கைது செய்துள்ளமையுடன் இத் திருட்டுச் சம்பவங்கிற்கு பயன்படுத்தியவை எனக் கூறப்படும் வாகனங்களையும் பிடித்துள்ளனர்.

# பாக்கு நீரிணையை நீந்திக் கடக்கவிருக்கும் 3 மாணவர்களுக்கு ஊக்குவிப்பும் பாராட்டும்





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு,ஒக்.21

பாக்கு நீரிணையை நீந்திக் கடக்கவிருக்கும் மட்டக்களப்பு புனித மிக்கல் கல்லூரி சாரணிய மாணவர்கள் மூவரின் முயற்சியையும் பாராட்டி, ஊக்குவிப்பு அன்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்தின் வேண்டுகோளின் பேரில் பெரேரா பிலான்மேட் சேதன உரக்கம்பனியின் அனுசரணையில் இந்த ஊக்குவிப்பு தொகை நேற்று மாவட்ட செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

பெரேரா பிலான்மேட் சேதன உரக்கம்பனியின்முகாமைத்துவப்பணிப்பாளர் சுரங்க டி சில்வாவின் ஆலோசனைக்கமைவாக இம்மாவட்டத்தில் விளையாட்டுத் துறையை ஊக்குவிக்கும் நோக்கில் இவ்வாறான நலன்திட்டங்களை மாவட்ட செயலகத்தினூடாக தொடர்ச்சியாக வழங்க உள்ளனர் என அந்நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் ரவிச்சந்திரன் செல்லையா இதன்போது தெரிவித்தார்.

இம்மாணவர்களான புளோரிங்டன் டயன்ஸ்ரித், புளோரிங்டன் டயன்பிரிடோ, இருதயநாதன் கெல்வின் கிசோ ஆகியோர் நாளை மறுதினம் 23ஆம் திகதி இந்தியாவின் தனுஷ்கோடியிலிருந்து பாக்குநீரிணையை நீந்திக் கடந்து தலைமன்னாரை அடையவுள்ளனர். இவர்கள் கடந்த ஒருவார காலமாக மன்னார் கடலில் நீச்சல் பயிற்சியில் ஈடுபட்டுவருகின்றனர்.

இம்மாணவர்கள் இம்முயற்சியில் வெற்றிபெறுவதற்கான வாழ்த்துச் செய்தியையும், அவர்களுக்கான ஊக்குவிப்புத் தொகையையும் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்த், புனித மிக்கல் கல்லூரி சிரேஷ்ட சாரணிய மாணவர்களிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட செயலக கணக்காளர் எம். வினோத், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வீ. ஈஸ்வரன், பெரேரா பிலான்மேட் சேதன உரக்கம்பனியின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள், புனித மிக்கல் கல்லூரி சிரேஷ்ட சாரணிய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# பலஸ்தீன மக்களுக்கு ஆதரவு தெரிவித்து மூதூரில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம்







(அப்துல்சலாம் யாசீம்)

இஸ்ரேல் – பலஸ்தீன் மோதல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமெனக் கோரியும், பலஸ்தீனத்தில் இடம்பெறும் படுகொலைகள், வைத்தியசாலை மீதான மிலேச்சத்தனமான தாக்குதலைக் கண்டித்தும், பலஸ்தீன மக்களுக்கு ஆதரவு தெரிவித்தும் மூதூரில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை மூதூரில் நேற்று வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையை தொடர்ந்து இக்கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மூதூர் மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியிலிருந்து நடைபவனியாக வந்து மூதூர் பிரதான வீதியில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பவனியில் வந்தோர் பலஸ்தீனத்திற்கு ஆதரவான சுலோகங்கள் கொண்ட பதாதைகளை ஏந்தி, கோசங்களை எழுப்பி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மூதூர் பொதுமக்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இதனையடுத்து பலஸ்தீன மக்களுக்கான துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது.



# பலஸ்தீன் மக்களிக்கு ஆதரவாக நேற்று 'சம்மாந்துறை மக்களின் அழுகை குரல்'!






(சம்மாந்துறை நிருபர் ஐ.எல்.எம் நாஸிம்)

பலஸ்தீன் மக்களுக்கு ஆதரவாக "சம்மாந்துறை மக்களின் அழுகைக் குரல்" எனும் தொனிப்பொருளில் துஆ பிராத்தனை நேற்று சம்மாந்துறையில் ஹிஜ்றா சந்தியில் இடம் பெற்றது.

பலஸ்தீன் மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான யுத்தம் நேற்றுடன் 14 நாள்களாக இடம் பெற்று வருகின்ற நிலையில் யுத்தத்தினால் இதுவரையில் பல ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழுந்துள்ளனர் .

பலஸ்தீன் மக்களுக்கு ஆதரவாக சம்மாந்துறையில் ஒன்று கூடிய பொது மக்கள் ஹிஜ்றா சந்தியில் கொட்டும் மழையில் துஆ பிராத்தனையில் ஈடுபட்டு அமைதியான முறையில் கலைந்து சென்றனர். ஹிஜ்றா சந்தியில் இலங்கை மற்றும் பலஸ்தீன் கொடிகள் பறப்பவிடப்பட்டுள்ளமையோடு "சம்மாந்துறை மக்களின் அழுகைக் குரல்" எனும் ஆதரவு பதாதையும் தொங்கவிடப்படுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# ஏறாவூரில் நேற்று இடம்பெற்ற பலஸ்தீன ஆதரவுப் பேரணி!







(கே.எ.ஹமீட்)

ஏறாவூர் ஜாமிஉல் அக்பர் ஜும்ஆப் பள்ளி வாசலில் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் இடம்பெற்ற குத்பா பிரசங்கத்தின் பின்னர் பலஸ்தீனில் இறந்த உறவுகளுக்காக ஜனாஸா தொழுகையும் மற்றும் துஆப் பிரர்த்தனையும் இடம் பெற்றன. அதனைத்தொடர்ந்து இஸ்ரேலுக்கு எதிரான பாலஸ்தீன் ஆக்கிரமிப்பையும் தொடர்த் தாக்குதல்களையும் கண்டித்தும் ஏறாவூர் பிரதான வீதியினூடாகச் சென்று மணிக் கூட்டுக் கோபுரம் வரையிலான பேரணி ஒன்று அமைதியாக நடாத்தப்பட்டது.

# வங்காள விரிகுடாவில் காற்றழுத்த தாழமுக்கம்



தென்மேற்கு மற்றும் தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் காற்றழுத்த தாழமுக்கம் உருவாகியுள்ளது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்ட தகவலில் - மேற்கு மத்திய வங்காள விரிகுடாவில் காற்றழுத்த தாழமுக்கம் ஒக்டோபர் 23 ஆம் திகதியன்று வலுப்பெற வாய்ப்புள்ளது.

இதன் காரணமாக தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். காற்றானது தென்கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 40-45 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-55 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தயம் காணப்படுகின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வெட்கப்படாத வெறிப் போக்கு!

'ஊருக்கடி உபதேசம் உனக்கில்லையடி' என்ற மாதிரி, இலங்கை நாடாளுமன்றத்தில் நேற்று மாறி மாறி உரையாற்றிய பௌத்த - சிங்களப் பேரினவாத தலைவர்களை, அதே நாடாளுமன்றத்தில் தமது உரை மூலம் நார் நாராகக் கிழித்துத் தொங்க விட்டிருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

சிங்களத் தலைவர்களின் இரட்டை வேட முக மூடியை அவர், விடயங்களை விவரமாக - விலாவாரியாக - குறிப்பிட்டு, கிழித்தெறிந்திருக்கின்றார். அவர்களின் பாசாங்குத்தனத்தை அப்பட்டமாக அம்பலப்படுத்தியிருக்கின்றார்.

இலங்கையில் இன்று வரை நீடிப்பது தேசிய இனப்பிரச்சினை. அது ஓர் அரசியல் பிணக்கு. அதை 'பயங்கரவாதப் பிரச்சினையாக' அடையாளப்படுத்தி, சோடித்து, தமிழர் தேசம் மீது ஒரு கொடூரப் போரை ஏவி விட்டவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அவர் இப்போது இஸ்ரேல் - பலஸ்தீனப் போரை ஒட்டி புதிய உபதேசம் செய்கிறார். அது 'சாத்தான் வேதம் ஓதுவது போல' அமைந்திருக்கின்றமைதான் வேடிக்கையானது.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை என்ற அரசியல் சிக்கலுக்குத் தீர்வாக தமிழ் மக்களை - தமிழர் தேசத்தை - கொன்றொழிக்கும் யுத்தத்தை மிகக் கொடூரமான முறையில் ஏவிவிட்ட மஹிந்த ராஜபக்ஷ, இப்போது மத்திய கிழக்குப் பிரச்சினையில், அரசியல் முரண்பாட்டுக்கு யுத்தம் தீர்வாகாது என்று தத்துவம் பிளக்கின்றார்.

யுத்தத்தின் இறுதி கட்டத்தில் புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியில், பல நூற்றுக்கணக்கில் நோயாளிகள் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த சமயத்தில், அந்த ஆஸ்பத்திரி மீது கண்முடித்தனமான குண்டு வீச்சை நடத்தின இலங்கை படைகள். ஐ.நா. தீர்மானம் வரை, யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் என்று வரையறை செய்யப்படும் குற்றச்சாட்டுகளில் ஆஸ்பத்திரி மீதான வான்வழித் தாக்குதல்களும் முக்கியமானவையாக அடங்கும். யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் மனிதாபிமானமே இல்லாத கொடூரங்கள் அரக்கத்தனமாக அரங்கேறிய போது, பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் மைத்திரிபால சிறிசேனதான். பின்னாளில் ஜனாதிபதியாகவும் இருந்தவர். அன்று அந்த ஆஸ்பத்திரி மீதான கொடூரத் தாக்குதலைக் கண்டிக்காமல் மூடி மறைத்து, யுத்தக்குற்றங்களுக்கு துணை போன மைத்திரிபால சிறிசேன, இன்று காசாவில் ஆஸ்பத்திரி மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டிக்கிறார். இது போன்ற விடயங்களை நேற்று நாடாளுமன்றத்தில் அப்பட்டமாக வெளிப்படுத்தி, இப்படி இரட்டை நாக்குப் பேச்சில் - பாசாங்குத்தனத்தில் - உரையாற்றுவதற்கு உங்களுக்கு வெட்கமே இல்லையா என்ற சாரப்பட, நாக்கைப் பிடுங்குமாற் போலக் கேள்வி எழுப்பி இருக்கின்றார் சுமந்திரன்.

பேரினவாத வெறிப்போக்கை வெளிப்படுத்துவதில் அச்சப்படாத - நாணப்படாத - பின்னடிக்காத - பௌத்த, சிங்களப் பேரினவாதத் தரப்புகளுக்கு இத்தகைய கேள்விகள் சுட மாட்டா. ஏனெனில் இனவெறி எப்போதுமே அவர்கள் சிந்தனையை மறைத்திருக்கும்.

# சுற்றுலாத்துறை வருமானம் 97.5 வீதத்தால் அதிகரிப்பு

இந்த ஆண்டின் முதல் 9 மாதங்களில் நாட்டின் சுற்றுலாத்துறை வருமானம் கடந்த ஆண்டை விட 97.5 வீதத்தினால் அதிகரித்துள்ளது.

இந்த வருடத்தின் வருமானம் 478.7 பில்லியன் ரூபா என இலங்கை மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த ஆண்டின் முதல் 9 மாதங்களில் நாட்டின் சுற்றுலா வருமானம் 242.4 பில்லியன் ரூபாவாக பதிவாகியது.

# பஸ்ஸில் பயணித்த குடும்பஸ்தர் மரணம்

– மஸ்கெலியா நிருபர் –

ஹட்டனிலிருந்து பஸ்ஸில் பயணித்த குடும்பஸ்தர் ஒருவர் பஸ்ஸிலேயே உயிரிழந்த சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

கண்டி போதனா வைத்தியசாலைக்குச் சென்று வீடு திரும்பிய போடைஸ் பஸ்ஸில் பயணித்த திக்ஓய – பட்டலகல பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவர் கடந்த சில மாதங்களாகத் தொற்றா நோய் ஒன்றுக்காகச் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் வீட்டிலிருந்து வெளியேறிய அவர் நேற்று மருத்துவமனைக்குச் சென்று வீடு திரும்பும்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அவர் பஸ்ஸிலிருந்து இறங்காமல் இருப்பதால் சந்தேகமடைந்த பயணிகள், சாரதி மற்றும் நடத்துநருக்கு அறிவித்துள்ளனர். அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அவர் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

ஹட்டன் பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கமைய உயிரிழந்தவரின் சடலம் அதே பஸ்ஸில் கிளங்கன் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாயமான மாணவர்கள் இருவரும் நேற்று மீட்பு!

– ரஸீன் ரஸ்மின் –

புகையிலை மற்றும் சுண்ணாம்பு வைத்திருந்தபோது அதிபரால் கண்டிக்கப்பட்ட நாத்தாண்டிய பிரதேசத்தில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 15 வயதுடைய மாணவர்கள் இருவர் காணாமல்போன நிலையில் குருநாகல் – புத்தளம் வீதியிலுள்ள வீடொன்றில் தங்கியிருந்த நிலையில் நேற்று மீட்கப்பட்டுள்ளனர்.

காணாமல்போன மாணவர் ஒருவரின் உறவினர் வீட்டிலேயே அந்த மாணவர்கள் இருவரும் தங்கியிருந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு மாணவர்களும் காணமல்போனதைப் பற்றி ஒரு மாணவனின் தாயும் மற்றைய மாணவனின் தந்தையும் நேற்றுமுன்தினம் நள்ளிரவு மாரவில தலைமையகப் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.

புகையிலை மற்றும் சுண்ணாம்பு போன்றவற்றை வைத்திருந்த நிலையில், பிடிபட்டதையடுத்து அது பற்றி பாடசாலை அதிபர் அந்த இரண்டு மாணவர்களையும் கண்டித்தார் எனவும், அதையடுத்து அவ்விருவரும் அழுது கொண்டிருந்தனர் எனவும் மாணவர்களின் பெற்றோர்கள் பொலிஸில் செய்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர் என்று பொலிஸ் வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

மாரவில தலைமையகப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் குழுவொன்று காணாமல்போன நிலையில் மீட்கப்பட்ட இரு மாணவர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் அவர்களைப் பெற்றோரிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சந்தோஷ் நாராயணனின் இசைக் குழுவினர் வருகை










யாழ்ப்பாணத்தில் இன்றைய தினம் சனிக்கிழமை இடம்பெறவுள்ள தென்னிந்திய பிரபல இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணனின் இசை நிகழ்வுக்காகத் தென்னிந்திய இசைக். கலைஞர்கள் பலரும் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக கலைஞர்கள் நேற்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்துள்ளனர்.

இசை நிகழ்வு இன்றைய தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் மாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த இசை நிகழ்வைப் பார்வையாளர்கள் இலவசமாகக் கண்டு களிக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆமாம் சாமி போட அரசமைப்புப் பேரவை ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு அல்ல

## சஜித் பிரேமதாஸ சபையில் குற்றச்சாட்டு

யாருடைய தேவைக்காகவும் பொலிஸ்மா அதிபரை நியமிக்க அரசமைப்புப் பேரவை தயார் இல்லை. அத்து டன் ஜனாதிபதியிடமிருந்து வரும் அனைத்து விடயங்களுக்கும் ஆமாம் சாமி போட அரசமைப்புப் பேரவை ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழுவல்ல என்பதை தெரிவித்துக்கொள்கிறோம் என எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பி குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக எதிர்கட்சித் தலைவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசமைப்புப் பேரவை பொலிஸ்மா அதிபர் ஒருவரை 3 தடவையும் நியமிக்காமல் இருப்பது போதைப்பொருள் வியாபாரி ஒருவரின் தேவைக்காகும் என அரச ஊடகங்கள் இரண்டு செய்தி வெளியிட்டிருக்கிறது.

அரசாங்கத்தினால் நிறுவகிக்கப் படுகின்ற, ஜனாதிபதி பொறுப்புக்கூற வேண்டிய 2 நிறுவனங்களே இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கின்றன.

அதனால் அரசமைப்புப் பேரவை பாதுகாக்கின்ற போதைப்பொருள் வியாபாரி யார் என்பதை நாங்கள் அறிந்துகொள்ள வேண்டும். அதற்காக இந்த பத்திரிகைகளின் ஆசிரியர்களை நாடாளுமன்றத்துக்கு அழைத்து இது தொடர்பாக கேட்கவேண்டும்.

அரசமைப்புப் பேரவை யாருடைய தேவைக்கும் பொலிஸ்மா அதிபரரை நியமிக்கத் தயார் இல்லை. போதைப் பொருள் வியாபாரிகளை பாதுகாப்பவர்களையோ உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களையோ நியமிக்கவும் நாங்கள் தயார் இல்லை.

ஆனால் நிலையான பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்க ஜனாதிபதி தெரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் ஜனாதிபதியின் கோரிக்கையை ஏற்று, 2 தடவைகள் பதவி நீடிப்புக்கு அனுமதியளித்தோம்.

அதனால், அரசமைப்புப் பேரவை ரப்பர் சீலுக்கு மட்டுப்படுத்தப்பட்டதல்ல. வரக்கூடிய அனைத்து நியமனங்களுக்கும் ஆமாம் சாமி போட அரசமைப்புப் பேரவை ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழுவல்ல என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்.



எனவே அரசமைப்புப் பேரவை போதைப்பொருள் வியாபாரிகளைப் பாதுகாப்பதாக அரச பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கும் செய்தி, அரசமைப்புப் பேரவை உறுப்பினர்களான சபாநாயகர், பிரதமர், ஜனாதிபதியின் பிரதிநிதி, மொட்டு கட்சியின் பொதுச் செயலாளர், எதிர்க்கட்சித் தலைவரான எனக்கு, கபீர் ஹாசிம் மற்றும் சிவில் அமைப்பு 3 பேருக்கு எதிரான பாரிய குற்றச்சாட்டாகும். அதனால் இந்த பத்திரிகை ஆசிரியர்களுக்கு எதிராக நாங்கள் சட்ட ரீதியில் நடவடிக்கை எடுப்போம். – என்று தெரிவித்துள்ளார்.





# கோர நிகழ்வுகளும் கொடூர நினைவுகளும்...!

## காசா மருத்துவமனையை தாக்கியழித்த இஸ்ரேல்!

**(பாலஸ்தீனத்தில் காசா மருத்துவமனை படுகொலையால் உலகே அதிர்ச்சி அடைந்துள்ள வேளையில், 36 வருடங்களுக்கு முன்பாக யாழ். போதனா வைத்திய சாலையில் இடம்பெற்ற படு கொலைகளின் நினைவு தினம் இன்று (21.10.2023) தமிழர் தாயகங்களில் நினைவு கூரப்படுகிறது)**

**யாழ். ஆஸ்பத்திரி படுகொலையின் 36 ஆவது நினைவு தினம் இன்று**

- ஐங்கரன் விக்கினேஸ்வரா -

உலக போர் விதிகளின் படி, எத்த கைய போர் என்றாலும் மருத்துவ மனைகளில் மீது தாக்குதல் நடத்தப் படக்கூடாது. காயப்பட்டவர்கள் மட்டு மின்றி அப்பாவி மக்களும் மருத் துவமனைகளில் தஞ்சம் புகுவார்கள். இதனால் ஒருபோதும் மருத்துவ மனைகள் தாக்குதல் நடத்தப்படக்கூடாது என்பது ஐ.நா. விதியுமாகும்.

### நொடிகளில் தரைமட்டமான காசா மருத்துவமனை

இதனை மீறி, இஸ்ரேல் காசாவில் உள்ள இருந்த பொது மருத்துவமனை யில் தாக்குதல் நடத்தியது பெரும் போர்க் குற்றம் என்றே கருதப்படுகிறது. மேற் கத்தய ஊடகங்கள் ஹமாஸ் மேற் கொண்ட தாக்குதல் காரணமாகவே இந்த உயிரிழப்புகள் இடம்பெற்றன என்று தெரிவித்த நிலையில் பின் னர் இஸ்லாமிய ஜிகாத்தின் ரொக் கட் தவறுதலாக வெடித்ததால் இந்த இழப்புகள் ஏற்பட்டுள்ளன என்று பொய்ப் பிரச்சாரங்களை மேற்கொள்கின்றன.

எனினும் இந்த அழிவின் அளவு ரொக்கட் தாக்குதலால் ஏற்பட்டுள்ளது என கருதமுடியாத அளவுக்குக் காணப் படுகின்றது. அல்ஜசீரா வெளியிட்டுள்ள வீடியோக்கள் மருத்துவமனையின் பல மாடிக் கட்டடங்கள் தீப்பற்றி எரிவதைக் காண்பித்துள்ளன. உடல்கள் சிதறி, பெரு மளவு இரத்தம் சிந்தியுள்ளதை இடி பாடுகள் இடையே காணமுடிகின்றது.

அங்கிலிகன் தேவாலயத்துக்குச் சொந்தமான இந்த மருத்துவமனை

(11ஆம் பக்கம் பார்க்க)



# கோர நிகழ்வுகளும் கொடூர நினைவுகளும்...!



(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்கூட்டிய எச்சரிக்கை இன்றியே தாக்கப்பட்டுள்ளது. இந்த மருத்துமனை காலை 7.30 மணிக்கு தாக்கப்பட்ட, அவ்வேளை இஸ்ரேலின் தாக்குதல்களில் காயமடைந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் அங்கு இருந்தனர்.

இஸ்ரேல் பொது மக்கள் குடியிருப்புகள் மீது மேற்கொண்டு வரும் தாக்குதல்களால் மருத்துவமனை பாதுகாப்பான இடம் என்று கருதி அங்கு தஞ்சமடைந்த பல பொதுமக்களும் காணப்பட்டனர்.

மருத்துவமனையில் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது பாரிய சத்தம் கேட்டது கூரை இடிந்து சத்திர சிகிச்சை இடம்பெற்றுக்கொண்டிருந்த அறையின் மீது விழத்தொடங்கியது. கணப் பொழுதில் எல்லாமே நடந்து முடிந்தன.

இது படுகொலை என்று வைத்தியர் ஹசன் அபு சிட்டா தெரிவித்துள்ளார்.

### யாழ். போதனா வைத்தியசாலையில் நடந்த படுகொலைகள்

தற்போது காசா மருத்துவமனை படுகொலையால் உலகே அதிர்ச்சி அடைந்துள்ள வேளையில், 36 வருடங்களுக்கு முன்பாக யாழ். போதனா வைத்திய சாலையில் நடந்த படுகொலைகளின் நினைவு தினம் தமிழர் தாயகங்களில் நினைவு கூறப்படுகிறது.

ஈழப்போரின் போது 1987 ஒக்ரோபர் 21 இல் இப்படுகொலை இடம்பெற்றது. யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையில் நுழைந்த இந்திய அமைதிப் படை இராணுவத்தினர் சரமாரியாகச் சுட்டதில் நோயாளிகள், தாதிகள், மருத்துவர்கள், மற்றும் பணியாளர்கள் 90 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

மனித உரிமைக் அமைப்புக்கள் இந்த படுகொலைகளை இனப்படுகொலை எனக்கூறியுள்ளன. அதேநேரத்தில் புலிகளுக்கும், இந்திய இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற சண்டைகளில் இடையில் அகப்பட்ட பொது மக்களே கொல்லப்பட்டனர் என்று இந்திய இராணுவத்துக்குப் பொறுப்பான லெப். ஜெனரல் தெபிந்தர் சிங் தெரிவித்திருந்தார்.

இலங்கை அரசு இத்தாக்குதலை மானுடத்துக்கு எதிரான குற்றங்கள் என 2008 ஆம் ஆண்டில் கூறியது. யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர்களின் மனித உரிமைகள் அமைப்பு, மற்றும் ஜோன் ரிச்சார்ட்சன் போன்ற மேற்குலகக் கண்காணிப்பாளர்கள் மற்றும் பலர் இது ஒரு மனிதப் படுகொலைகள் எனக் கூறியுள்ளனர்.

### இஸ்ரேல் பொய்யும் மறுப்பும்

காசா மருத்துவமனையில் நோயாளிகள் சுகாதார பணியாளர்கள் அங்கு தஞ்சமடைந்திருந்த மக்கள் மீதான இந்த அதிர்ச்சி தரும் தாக்குதலை எவற்றாலும் நியாயப்படுத்த முடியாது என்று குறிப்பிட்டுள்ள மருத்துவமனை வைத்தியர் ஹசன் அபு சிட்டா, இது ஒரு இலக்கல்ல இந்த இரத்தக்களறி நிறுத்தப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

இந்த மருத்துவமனையில் ஏற்கனவே ஏனைய காயங்களால் பாதிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையான மக்கள் காணப்பட்டனர். தற்போது காயமடைந்த மக்கள் தரையில் வலியில் கதறுகின்றனர்.

ஆயினும் காசாவில் அல்-அஹ்லி மருத்துவமனை மீதான தாக்குதலை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மறுத்துள்ள நிலையில், அவர் பொய் சொல்கிறார் என்று ஐ.நாவுக்கான பாலஸ்தீன தூதர் ரியாத் மன்சூர் தெரிவித்துள்ளார்.

அவர் அளித்துள்ள பேட்டியில், "அவர் ஒரு பொய்யர். மருத்துவமனையை சுற்றி ஹமாஸ் அமைப்பின் செயல்பாடு இருப்பதாகக் கருதி இஸ்ரேல் இந்த தாக்குதலை நிகழ்த்தியது என்று இஸ்ரேல் செய்தித் தொடர்பாளர் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டிருந்தார்.

தற்போது அவர் தனது பதிவை நீக்கிவிட்டார். ஆனாலும், அதன் நகல் எங்களிடம் உள்ளது. இந்த தாக்குதலுக்கு இஸ்ரேல்தான் காரணம். பொய்க் கதைகளை அவர்கள் புனைவதை ஏற்க முடியாது" எனத் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் தாக்குதலில் காசாவைச் சேர்ந்த 4ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இஸ்ரேல் தரப்பில் 1300 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

காசா மருத்துவமனை மீதான தாக்குதலில், தரை மட்டமாகி அப்பாவி மக்கள் பலியான கொடூரத்தை இஸ்ரேல் மறுத்தாலும், உலக நாடுகள் கண்டனத்தை தெரிவித்துள்ளன.

இஸ்ரேலுக்கு அமெரிக்க அதிபர் ஜோ பிடன் வந்துள்ள நிலையில், இந்த தாக்குதல் காசா பிராந்தியத்தில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. மருத்துவமனை மீதான தாக்குதலுக்கு அரபு நாடுகளும், ஐ.நாவும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இஸ்ரேல் - பாலஸ்தீன தொடரும் மோதலில் இந்த மருத்துவமனை மீது நடந்த தாக்குதலில் குறைந்தது 500 பேர் உயிரிழந்துவிட்டனர் என்று காசா சுகாதாரத்துறை அறிவித்துள்ளது. இந்த வான் தாக்குதலுக்கு இஸ்ரேல் தான் காரணம் என்று காசா குற்றம் சாட்டியுள்ளது.

இஸ்ரேல் - காசா இடையே உடனடியாக போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அரபு நாடுகளும், ஐ.நாவும் வலியுறுத்தியுள்ளன. ஐ.நா பொதுச் செயலாளர் ஆண்டனியோ கட்டரஸ் வெளியிட்ட அறிவிப்பில், காசாவில் உள்ள மருத்துவமனை மீதான தாக்குதலில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்த செய்தி மிகுந்த வேதனையை ஏற்படுத்தி இருக்கிறது. இந்த தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறேன். பாதிக்கப்பட்ட மக்களின் குடும்பங்களுக்கு ஆறுதலை தெரிவித்துக்கொள்கிறேன். சர்வதேச மனிதாபிமான சட்டப்படி மருத்துவமனைகளும், மருத்துவ பணியாளர்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

### காசாவின் மருத்துவப் பிரிவு செயல் இழந்து செல்கிறது

அடுத்த சில நாள்களில் காசாவின் மருத்துவப் பிரிவு செயல் இழக்கும். கொல்லப்பட்டவர்கள் அனைவரும் பொது மக்கள் என்பதால் இந்த தாக்குதல் மிக மோசமான கொடூரமாகும். அப்பாவி மக்கள் தங்கள் வீடுகளில் இருந்து தப்பியோடிப் பாதுகாப்பான இடம் என்று தாங்கள் கருதிய இடத்தில் தஞ்சமடைந்திருந்தனர். மருத்துவனையில் சர்வதேச சட்டங்களின் கீழ் அது பாதுகாப்பான இடம் எனவும் மருத்துவமனையின் இயக்குநர் வைத்தியர் சியாட் செகாடா அல்ஜசீராவுக்குத் தெரிவித்துள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# கோர நிகழ்வுகளும் கொடூர நினைவுகளும்...!

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிருகத்தனமான படுகொலை என்றும் சர்வதேச விதிகளை இஸ்ரேல் அப்பட்டமாக மீறியுள்ளதாக பாலஸ்தீன அதிபர் அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

ஜோர்டானில் இருந்த நிலையில், இந்த கொடூர தாக்குதல் குறித்த தகவல் கிடைத்தவுடன் அவர் மேற்கு கரைக்குத் திரும்பினார். அமெரிக்க அதிபருடன் நடக்கவிருந்த சந்திப்பை ரத்து செய்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே இந்தத் தாக்குதலுக்கு அரபு நாடுகள் உட்பட உலகின் பல்வேறு நாடுகளும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

பாலஸ்தீனத்தின் காசா அல்-அஹ்லி மருத்துவமனை மீது இஸ்ரேல் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலில் மருத்துவமனையில் தஞ்சமடைந்திருந்த 500 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்ட துயர சம்பவத்துக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் பாலஸ்தீன அரசு 3 நாள்கள் துக்க தினமாக அறிவித்தது.

தொடர்ந்து வரும் இஸ்ரேல் - ஹமாஸ் தாக்குதலில், தரை வழியாகவும் வான் வழியாகவும் இஸ்ரேல் தாக்குதல் நடத்திவருகின்றது. இந்த தாக்குதலில் இது வரையில் 5000 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

காசா பகுதியிலிருந்து மக்கள் வெளியேற கால அவகாசம் கொடுக்கப்பட்டிருந்த நிலையில் இஸ்ரேல் விமான படை பலஸ்தீன் மக்களை குறிவைத்து தாக்குதல் நடத்தியுள்ளது.

இஸ்ரேலின் இந்த அதிபயங்கர தாக்குதலுக்கு பாலஸ்தீனம், எகிப்து உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. தற்போது இஸ்ரேலின் இக்கொடூர தாக்குதலைக் கண்டித்து பாலஸ்தீனத்தின் மேற்கு கரையில் கண்டனப் போராட்டங்கள் வெடித்துள்ளன.

2007 இல் ஹமாஸ் அமைப்பினர் காசா ஆட்சியை கைப்பற்றிய பின்னர் ஹமாசுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் இடம்பெற்றுவரும் மோதல்களில் ஒரே நாளில் மிக அதிகளவானவர்கள் கொல்லப்பட்ட கோரமான சம்பவமாக இது விளங்குகின்றது.

### யாழ்.போதனா வைத்தியசாலை

யாழ்ப்பாணம் பொது வைத்திய சாலை வட மாகாணத்தில் மக்கள் அடர்ந்து வாழும் யாழ்ப்பாணக் குடா நாட்டு மக்களுக்கு அடிப்படை மற்றும் உயர்தர மருத்துவ வசதிகளை வழங்கும் ஒரேயொரு மருத்துவமனை ஆகும்.

போர்க் காலங்களில் இப்பகுதி போரில் ஈடுபடுபவர்கள் அணுகாத வண்ணம் பாதுகாக்கப்பட்ட ஒரு மருத்துவமனையாக இயங்கி வந்தது.

1987 ஒக்ரோபர் 21 தீபாவளி விடுமுறை நாளாகும். அன்றும் முதல் நாள்களிலும் குடாநாட்டின் பல்வேறு பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற இந்திய இராணுவத்தினரின் ஏவுகணை வீச்சுகளில் இறந்த 70 இற்கும் அதிகமான பொது மக்களின் இறந்த உடல்கள் மருத்துவமனையின் பிணவறையில் வைக்கப்பட்டிருந்தன.

விடுதலைப் புலிகளுக்கும், இந்திய அமைதிப் படையினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலை அடுத்து, யாழ். நகரை இந்திய இராணுவம் கைப்பற்றும் என்ற அச்சம் நிலவியது. இதனால் மருத்துவமனையின் ஊழியர்கள் சிலர் அச்சத்தில் பணிக்குச் செல்லத் தயக்கமடைந்த நிலையிலும் பலர் தமது கடமைகளுக்குச் சென்றிருந்தனர்.

ஒக்ரோபர் 21, 1987 காலையில் யாழ். கோட்டைப் பகுதியில் இருந்து மருத்துவமனைப் பகுதியை நோக்கி பீரங்கிக் குண்டுத் தாக்குதல்களும், உலங்கு வானூர்திகளில் இருந்து குண்டுத் தர்க்குதல்களும் நடத்தப்பட்டன.

அன்று மாலை இந்திய இராணுவத்தினர் மருத்துவமனையின் முன்பக்கமாக உள்ளே வந்தனர். நடைபாதை வழியாக உள்ளே வந்த அவர்கள் அங்கிருந்த அனைவரையும் உள்ளே செல்லுமாறு பணித்தனர். அதன் பின்னர் மேற்பார்வையாளரின் அலுவலகத்தினுள்ளும் ஏனைய அறைகளுள்ளும் சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினர் என நேரில் கண்டவர்களின் கூற்றுப் படி, பல பணியாளர்கள் இறந்து வீழ்ந்தனர்.

இவர்களில் மேற்பார்வையாளர், மற்றும் முதலுதவி வண்டி சாரதியும் அடங்குவர். ஒரு படையினன் பணியாளர் ஒருவரை நோக்கி கிரனேட்டு எறிந்ததில் பலர் கொல்லப்பட்டனர். இன்னும் ஒருவரின் கூற்றுப் படி, இந்திய இராணுவத்தினர் ஊடுகதிரியல் அறைக்குள் நுழைந்து அங்கிருந்த பலரைச் சுட்டுக் கொன்றனர்.

அதேவேளை எட்டாம் இலக்க வார்டில் இருந்து நோயாளிகள் பலர் இங்கு பாதுகாப்புக்காக தங்கியிருந்தனர். இறந்து விட்டதாகத் தரையில் படுத்திருந்த சிலர் உயிர் தப்பினர்.

இரவு முழுவதும் துப்பாக்கிச் சூடுகளும் எறிகணை வீச்சுகளும் இடம்பெற்றன என்று நேரில் கண்டவர்களின் சாட்சியங்கள் தெரிவிக்கின்றன.

### மறு நாள் ஒக்ரோபர் 22, 1987

காலையில் மருத்துவர் சிவபாதசுந்தரம் மேலும் மூன்று தாதிகளுடன் மருத்துவமனையில் இருந்து வெளியேறினர். அவர்கள் தமது கைகளை மேலே தூக்கியவாறு "நாம் சாதாரண மருத்துவர்களும் தாதிகளும். நாம் சரணடைகிறோம்," எனக் கத்தியபடி சென்றனர். அவர்கள் மீதும் துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்பட்டன. மருத்துவர் சிவபாதசுந்தரம் அங்கே கொல்லப்பட்டார், தாதிகள் மூவரும் கடும் காயங்களுக்குள்ளானார்கள்.




இதன்பின் 11 மணியளவில் இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் வார்டு ஒன்றினுள் நுழைந்தார். ஒரு பெண் மருத்தவர் எதிரில். அவர் இராணுவ அதிகாரிக்கு நிலைமையை விளக்கிய பின்னர் அவர் ஏனைய பணியாளர்களை கைகளைத் தூக்கியவாறு வெளியேறி வருமாறு கூறினார். அங்கு உயிருடன் இருந்த 10 பேர் வெளியேறினர். வெளியேறும் போது அவர்கள் மருத்துவர் கணேசரத்தினம் இறந்து கிடப்பதைக் கண்டனர். அன்று மாலை இறந்தவர்கள் அனைவரினதும் உடல்கள் சேகரிக்கப்பட்டுத் தகனம் செய்யப்பட்டன என்று இக்கோர நிகழ்வை நேரில் கண்டவர்களின் சாட்சியங்கள் தெரிவிக்கின்றன.

### பாரிய மனிதப் படுகொலை

ஆனாலும் யாழ். மருத்துவமனை வளாகத்தினுள் இருந்த தம்மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இடையில் அகட்ட பொது மக்களே கொல்லப்பட்டனர் என்றும் இந்திய இராணுவம் தெரிவித்தது. லெப். ஜெனரல் தெப்பிந்தர் சிங் இதனை மீண்டும் வலியுறுத்தினார். ஆனால், இத்தாக்குதல் தூண்டுதல் அற்ற படுகொலைகள் என்று மனித உரிமை அமைப்புக்களும், இலங்கை அரசும் அப்போது தெரிவித்தன.




# ஆஸிக்கு இரண்டாவது வெற்றி



**உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை**

| | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ | பு | ஓ.ச |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | நியூஸிலாந்து | 4 | 4 | 0 | 0 | 0 | 8 | 1.923 |
| 02 | இந்தியா | 4 | 4 | 0 | 0 | 0 | 8 | 1.659 |
| 03 | தென்னாபிரிக்கா | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | 1.385 |
| 04 | அவுஸ்திரேலியா | 4 | 2 | 2 | 0 | 0 | 4 | -0.193 |
| 05 | பாகிஸ்தான் | 4 | 2 | 2 | 0 | 0 | 4 | -0.456 |
| 06 | இங்கிலாந்து | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.084 |
| 07 | பங்களாதேஷ் | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -0.784 |
| 08 | நெதர்லாந்து | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.993 |
| 09 | ஆப்கானிஸ்தான் | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -1.250 |
| 10 | இலங்கை | 3 | 0 | 3 | 0 | 0 | 0 | -1.532 |

குறிப்பு: போ–போட்டி, வெ–வெற்றி, தோ–தோல்வி, மு.அ.–முடிவு அற்றது, பு–புள்ளி, ஓ.ச.–ஓட்ட சராசரி

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டம் ஒன்றில் அவுஸ்திரேலியா – பாகிஸ்தான் அணிகள் பெங்களூரில் மோதின.

இந்த ஆட்டத்துக்கான நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி, முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது,

இதையடுத்து அவுஸ்திரேலியாவின் தொடக்க வீரர்களாக வோர்னர், மார்ஷ் ஆகியோர் களமிறங்கினர். இருவரும் தொடக்கம் முதலே அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர். பாகிஸ்தானின் பந்து வீச்சை அடித்து நொருக்கிய இந்த இணை மைதானத்தின் நாலாபுறமும் சிக்ஸர்களைப் பறக்கவிட்டு அசத்தியது.

அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய இருவரும் சதம் அடித்து அசத்தினர். இந்த இணை முதலாவது விக்கெட்டுக்காக 259 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் மார்ஷ் 121 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பின்னர் களமிறங்கிய மக்ஸ்வெல் (0), ஸ்மித் (7) ஆகியோர் வந்த வேகத்தில் 'பெவிலியன்' திரும்பினர். இவர்களைத் தொடர்ந்து இரட்டைச் சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட வோர்னர் 163 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இதையடுத்து மார்கஸ் ஸ்டோனிஸ், ஜோஷ் இங்க்லிஸ் ஜோடி சேர்ந்தனர். இங்க்லிஸ் 13 ஓட்டங்களுடனும் ஸ்டோனிஸ் 21 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

பின்னர் மார்னஸ் லபுஸ்சேன் மற்றும் பேட் கம்மின்ஸ் ஜோடி சேர்ந்தனர். இறுதியில் அவுஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 367 ஓட்டங்களைக் குவித்தது.

பாகிஸ்தான் தரப்பில் ஷாகின் அப்ரிடி 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பின்னர் 368 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் பாகிஸ்தான் அணி ஆடியது.

அந்த அணியின் தொடக்க வீரர்களாகக் களமிறங்கிய அப்துல்லா (64), இமாம் (70) ஆகியோர் சிறப்பாக ஆடி அரைச் சதம் அடித்துச் சென்றனர்.

பின்னர் களமிறங்கிய பாபர் ஆசம் (18), ரிஸ்வான் (46), சவூத் சகீல் (30), இப்டிகார் (26) ஆகியோர் ஓரளவு சிறப்பாக ஆடிச் சென்றனர்.

இறுதியில் பாகிஸ்தான் அணி 45.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 305 ஓட்டங்களை மாத்திரமே சேர்த்தது.

இதன்படி ஆஸ்திரேலியா அணி 62 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆட்டநாயகனாக அவுஸ்திரேலியாவின் வோர்னர் தெரிவானார்.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் இலங்கை – நெதர்லாந்து அணிகள் மோதவுள்ளன.



# டிப்பரில் ஏறிச்சென்று தேசிய மட்ட கரப்பந்தாட்ட சம்பியன் கிண்ணத்தைக் கொண்டுவந்த பெண்கள்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறையிலிருந்து டிப்பர் ரக வாகனத்தில் பதுளைக்குச் சென்று தேசிய மட்ட பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் உகன பாடசாலை சம்பியனாகியுள்ளது.

அடிப்படை வசதிகள் எதுவுமற்ற அம்பாறை மாவட்டத்தின் பின்தங்கிய உகன கிராமப்புறத்தில் அமைந்துள்ளது உகன பாடசாலை.

இப்பாடசாலையின் மாணவிகள் பதுளையில் இடம்பெற்ற தேசிய ரீதியிலான பாடசாலைகளுக்கிடையிலான 16 வயதுக் குட்பட்ட பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியில் பங்கேகற்றிருந்தனர்.

இந்தப் பாடசாலை, பிரபல பல பாடசாலைகளை தோற்கடித்து தேசிய மட்டத்தில் வெற்றிபெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இது அம்பாறை மாவட்டத்தில் விளையாட்டுத் துறையில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் இப் பாடசாலை மீது அனைவரினதும் கவனமும் திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய மட்ட கபடிப் போட்டியில் சம்பியனான யாழ். பெண்கள்



34 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டின் கபடிப் போட்டியில் யாழ்ப்பாண மாவட்ட மகளிர் அணி சம்பியனானது. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மகரகம இளைஞர் மத்திய நிலைய உள்ளக விளையாட்டு அரங்கில் இப் போட்டி இடம்பெற்றது.

இந்த இறுதிப் போட்டியில் குருநாகல் மாவட்ட மகளிர் அணியை எதிர்த்தாடிய யாழ். மாவட்ட மகளிர் அணி, 37:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மகளிர் பிரிவுக்கான சம்பியன் பட்டத்தை தனதாக்கிக்கொண்டது.

அதேவேளை ஆண்களுக்கான கபடிப் போட்டியில் அம்பாறை மாவட்ட அணி சம்பியன் பட்டத்தை வென்றது.

# இலங்கை - சீன ஜனாதிபதிகள் சந்திப்பு
## இரு தரப்பு விவகாரங்கள் குறித்து பேச்சு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்க் ஆகியோர் இடையில் பிஜீங் நகரில் நேற்று முற்பகல் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இரு தரப்பு விவகாரங்கள் குறித்து இரு தலைவர்களும் இதன்போது பேச்சு நடத்தியுள்ளனர்.

சீனாவின் "ஒரே மண்டலம் ஒரே பாதை" திட்டத்தின் பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் சர்வ தேச ஒத்துழைப்பிற்கான மூன்றாவது மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதி பதி சீனாவிற்கு விஜயம் மேற்கொண் டுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்கவிற்கும் சீன நிதி அமைச்சருக்கும் இடையிலான இருதரப்பு பேச்சுவார்த்தை நேற்று பீஜிங்கில் நடைபெற்றது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பிற் கான, இருதரப்பினருக்கும் உகந்த இடைக் கால மற்றும் நீண்ட கால வேலைத்திட் டத்திற்கு முழுமையான ஆதரவு வழங்கு வோம் என சீன நிதி அமைச்சர் இதன் போது உறுதியளித்திருந்தார்.

# மருந்தாளர்களுக்குப் பற்றாக்குறை:
## மருந்து விநியோகத்தில் நெருக்கடி!



மருந்தாளர்களுக்கு நிலவும் பற்றாக் குறை காரணமாக சில வைத்தியசாலை களில் மருந்து விநியோகத்தில் பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது என அரச மருந்தாளர்கள் சங்கம் தெரிவித் துள்ளது.

தற்போது நிலவும் பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக மருந்தா ளர்கள் பலர் வெளிநாடுகளுக்கு வேலை தேடிச் செல்வது பிரச்சினையை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது என அரச மருந் தாளர்கள் சங்கத்தின் தலைவர் துஷார ரணதேவ குறிப்பிட்டுள்ளார்.

மருந்தாளர் பற்றாக்குறையினால் வெவ்வேறு தரங்களில் சேவையாற் றும் ஊழியர்கள், மருந்து விநியோ கத்தை முன்னெடுகின்றனர் என அவர் கூறியுள்ளார்.

இந்த நிலைமை தொடர்ந்தால் மருந்து விநியோக முறைமையில் பாரிய அபாயம் ஏற்படும் எனவும் அரச மருந்தா ளர்கள் சங்கத்தின் தலைவர் துஷார ரணதேவ சுட்டிக்காட்டினார்.

பொதுமக்களின் வரிப்பணத்தில் பல்கலைக்கழகங்களில் மருந்தாளருக் கான கற்றல் நடவடிக்கைகளை நிறைவு செய்யும் மாணவர்கள், வெவ்வேறு தொழில்களை தேடிச்செல்கின்றமை கவலைக்குரிய விடயம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சுகாதார அமைச்சும் மருந்தாளர்களை சேவையில் இணைத் துக்கொள்வதை நிறுத்தியுள்ளமை தற்போதைய நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது என அரச மருந் தாளர்கள் சங்கத்தின் தலைவர் துஷார ரணதேவ சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஆட்சியில் நீடிப்பதில்தான் மோடி அரசின் கவனம்!

## - மக்கள் நலனில் அல்ல என்கிறார் பிரியங்கா காந்தி



ஆட்சியில் நீடிப்பதில்தான் நரேந்திர மோடி அரசின் கவனம் இருக்கிறதே தவிர, மக்கள் நலனில் அல்ல என்று காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி விமர்சித்துள்ளார்.

ராஜஸ்தான் சட்டப்பேரவைத் தேர்தல் அடுத்த மாதம் 25 ஆம் திகதி நடைபெற உள்ளதை முன்னிட்டு அங்கு தேர்தல் பிரச்சாரம் சூடு பிடித்துள்ளது.

ராஜஸ்தானின் தவுசா மாவட்டத்தில் உள்ள சிக்ராய் நகரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிரியங்கா காந்தி, ராஜஸ்தானில் பா.ஜ.க. ஆட்சியில் இருந்தபோது இம்மாநிலத்திற்காக எத்தனை திட்டங்களைக் கொண்டு வந்தது? நரேந்திர மோடியும் பா.ஜ.கவும் ஒரு விஷயத்தில் தெளிவாக இருக்கிறார்கள்.

ஆட்சியில் நீடிக்க வேண்டும் என்பதுதான் அவர்களின் ஒரே இலக்கு. மக்கள் நலன் அல்ல. அவர்களுக்கு தங்களை வலுப்படுத்திக் கொள்வதில்தான் ஆர்வம் இருக்கிறது.

பா.ஜ.கவின் கொள்கை தற்போது எப்படி மாறி இருக்கிறது என்றால், ஏழைகளின் பைகளில் இருந்து பணத்தை எடுத்து மிகப் பெரிய தொழிலதிபர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதுதான். எனவே, ராஜஸ்தான் மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். காங்கிரஸ் கட்சி மீண்டும் ஆட்சியில் நீடிக்க மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும். காங்கிரஸ் கட்சிதான் மாநிலத்தை ஒற்றுமைப்படுத்தும்.

காங்கிரஸ் கட்சியின் கடந்த காலத்தை மீண்டும் மீண்டும் விமர்சிப்பவராக நரேந்திர மோடி உள்ளார். உண்மையான தலைவர் என்பவர் நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும்தான் பார்ப்பாரே தவிர கடந்த காலத்தை அல்ல.

சேவை மற்றும் இரக்கத்தின் மூலம் தான் பொது நலத்திட்டங்களை சாதிக்க முடியும். வளர்ச்சி குறித்து பேசுவதற்குப் பதிலாக மதம் மற்றும் சாதி குறித்து பாஜக ஏன் பேசுகிறது என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# எங்களுக்கு நாங்களே போட்டி: வேறு யாரும் போட்டியில்லை!

## - சீமான் நம்பிக்கை



சிறு உயிரினங்களுக்கு இரையாகட்டும் என்று அரிசி மாவில் கோலமிட்ட பெருமை கொண்ட தமிழினத்தை 60 ஆண்டுகால ஆட்சி இலவச அரிசிக்கு கையேந்த விட்டுள்ளது என்று சீமான் தெரிவித்துள்ளார்.

நாம் தமிழர் கட்சியின் கலந்தாய்வுக் கூட்டம் மற்றும் பொதுக்கூட்டம் ஆகிய வற்றில் பங்கேற்க அந்த அந்த கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நேற்று தருமபுரி சென்றிருந்தார். இதன்போது ஊடகங்களுக்கு அவர் கருத்து தெரிவிக்கையில்,

மக்கள் மத்தியில் நாம் தமிழர் கட்சியின்மீது பெரும் எதிர்பார்ப்பும், நம்பிக்கையும் உள்ளது. இந்த மண்ணுக்கும் மக்களுக்குமான அரசியலை முன்னெடுத்து பேசுவது நாங்கள் தான். இளைய தலைமுறை பிள்ளைகளிடம் நாங்கள் பெரிய நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளோம்.

5 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் தான் வருகிறது. ஆனால், மாறுதலும் ஆறுதலும் இல்லை, வளர்ச்சியும் இல்லை. தேசத்தை நாசமாக்கிய ஒரே சொல் இலவசம் என்றார் குன்றக்குடி அடிகளார். இலவசங்கள், சலுகைகள் எதையும் தர வேண்டாம். எங்களுக்கான உரிமைகளை தாருங்கள் என்கிறோம் நாங்கள். கல்வியை தரமாக கொடுத்தால், பேருந்து பயணத்துக்கு பெற்றோரே பணம் செலுத்திக் கொள்வார்கள். நிரந்தர வருவாய் அளிக்கும் வளர்ச்சித் திட்டங்களை ஏற்படுத்துங்கள்.

மற்றவர்கள் கல் மாவு மூலம் கோலம் போட்டுக் கொண்டிருந்த காலத்தில், எறும்பு உள்ளிட்ட சிறு உயிரினங்களுக்கு இரையாகட்டும் என்று அரிசி மாவில் கோலம் போட்ட பெருமைமிக்க தமிழ் இன மக்களை, கடந்த 60 ஆண்டு கால ஆட்சி இலவச அரிசிக்கு கையேந்த வைத்துள்ளது. விளையாட்டில் மதம், கடவுள் சார்ந்த கோஷங்கள் மூலம் நம்மை கற்காலத்தை நோக்கி தள்ளிச் செல்கின்றனர். அடுத்த தலைமுறை பிள்ளைகள் சாதி, மதம், கவர்ச்சி ஆகியவை அண்ட முடியாத பெரும் நெருப்பாக வர வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# தரைவழி தாக்குதலுக்கு தயாராகும் இஸ்ரேல்: காசாவின் எல்லையில் இராணுவம் குவிப்பு!






இஸ்ரேல் மற்றும் காசாவுக்கு இடையிலான போர் இடம்பெற்று வருகின்றது. இந்த நிலையில் இஸ்ரேல் தற்போது தரைவழி தாக்குதலுக்கு தயாரிகிக்கொண்டிருக்கிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசா எல்லையில் இஸ்ரேல் இராணுவத்தினர் ரோந்துப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். எல்லைக்கோடு பகுதியில் சிறப்புப் படையினர் நிலை நிறுத்தப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

காசா மீது அதிகாரப்பூர்வமாக போர் அறிவித்து சுமார் 14 நாட்களாக இரு நாடுகளும் அடுத்தடுத்து பதிலடி தாக்குதல்கள் நடத்தி வருகின்றன.

இதில் குழந்தைகள், பெண்கள் உட்பட ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பலியாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதுவரை இஸ்ரேலில் தரப்பில் 1,400 பேரும் காசாவில் 3 ஆயிரத்து 478 பேரும் பலியாகியுள்ளனர் என அந்த நாட்டு ஊடகங்கள் குறிப்பிடுகின்றன.

முன்னதாக ஏவுகணைகள், குண்டுகள் மூலம் பெரும்பாலும் வான் வழித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், தங்களின் அடுத்தகட்ட தாக்குதலாக தரைவழித்தாக்குதல் இருக்கும் என இஸ்ரேல் அறிவித்திருந்தது.

இந்த நிலையில், காசா எல்லையில் சிறப்புப் படையினர் தற்போது ரோந்துப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றமை தரைவழித்தாகுதலுக்கு வழிவகுக்கும் என அஞ்சப்படுகிறது.

# அல் ஜசீரா ஊடகத்துக்கு தடை விதித்தது இஸ்ரேல்!




சர்வதேச ஊடகமான அல் ஜசீராவின் இஸ்ரேலிய அலுவலகத்தை மூட அந்த நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாட்டின் தேசிய பாதுகாப்பை பாதுகாக்கவும், மோதல்களை தவிர்க் கவும் இந்த முடிவு எடுக்கப்படுகிறது என அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

ஜெருசலேமில் நடந்த செய்தியாளர் சந்திப்பின் போது அந்த நாட்டின் அரசாங்க செய்தி தொடர்பாளர் அயூப் காரா இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

அல் ஜசீரா அலுவலகங்களை மூடுவதற்கும் அவர்களின் வேலையைத் தடைசெய்வதற்கும் அரபு நாடுகளின் நடவடிக்கையின் அடிப்படையில் எங்கள் முடிவை மேற்கொண்டுள்ளோம்.

வன்முறையை மேற்கொள்ளும் முகமாக இந்த ஊடகம் செயற்படுகிறது என்று குற்றச்சாட்டுக்கள் எழுந்துள் என என அயூப் காரா சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் இந்த குற்றச்சாட்டை, அந்த நிறுவனம் மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 21.10.2023

## மேஷம்

இன்றைய நாள் சற்று மந்தமாக காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மன நிம்மதி மற்றும் ஆறுதலை அளிக்கும்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. அதன் மூலம் சுமாரான பலன்களே கிடைக்கும். கடின உழைப்பின் மூலம் மட்டுமே வெற்றி கிட்டும்.

மகிழ்ச்சியாக இருக்க அகந்தை உணர்வை தவிர்க்கவும். உங்கள் துணையுடன் மனம் திறந்து பழகவும்.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக கூடுதல் செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு மிகுந்த கவலையை அளிக்கும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தலை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.அது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

## ரிஷபம்

நீங்கள் தைரியமாக சரியான பாதையில் செயல்பட வேண்டியது அவசியம். உங்கள் பயத்தை ஒதுக்கித் தள்ளி நம்பிக்கையுடன் செயல்படுங்கள்.

உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உங்களுக்கு பொறுமை அவசியம். நீங்கள் யோசித்து சிறப்பாக செயல்பட வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும்போது இணக்கம் குறைந்து காணப்படும். முதல் முறை பேசிக்கொள்வது போல பேசுவீர்கள்.

இன்று கூடுதல் செலவுகள் ஏற்படும் என்பதால் உங்களுக்கு கவலை ஏற்படும். இது தவிர்க்க முடியாதது. எனவிய கவனமாக இருக்கவும்.

கண்களில் எரிச்சல் பாதிப்பை ஏற்படுத்தும். மருத்துவம் பார்த்துக் கொள்வது நல்லது.

## மிதுனம்

நீங்கள் சுய முன்னேற்றப்பாதையில் செல்வீர்கள். நீங்கள் இன்று சில லட்சியங்களை அடைய வேண்டும் என்று உங்களை தயார் படுத்திக் கொண்டு இந்த நாளை சுமூகமாக்குவீர்கள்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் பணியில் வெற்றி பெற உங்கள் மனதை செலுத்துவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நட்பாகவும் அன்பாகவும் நடந்து கொள்வீர்கள். பயணத்தின் போது இருவரும் உற்சாகமான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

கடின உழைப்பின் மூலம் மட்டுமே வெற்றி கிடைக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும். அமைதியான அணுகுமுறை மூலம் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள்.

## கடகம்

இன்று பண வரவு காணப்படலாம். இன்று உங்கள் செயல்களை முடிப்பதற்கு திட்டமிடுவீர்கள். நீண்ட கால திட்டங்களுக்கு இந்த நாள் உகந்த நாள்.

உங்கள் பணியில் புதிய வாய்ப்புகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. கடின உழைப்பு மற்றும் சிறந்த முயற்சி மூலம் நீங்கள் சிறந்த நிலைக்கு வருவீர்கள். இதன் மூலம் உங்களுக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையுடன் வெளிப்படையாக பழகுவீர்கள். இதனால் இருவருக்கிடையே நல்லிணக்கம் வலுப்படும்.

உங்கள் நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கும். பணத்தை பயனுள்ள நோக்கத்திற்கு செலவு செய்வீர்கள்.

உடல் ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும். திருப்தி உணர்வு காணப்படும்.

## சிம்மம்

கையிலுள்ள பணிகளை முடிப்பதற்கு நீங்கள் மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும்.பொதுவில் இன்றைய நாள் மிகவும் கடினமாக இருக்கும்.

கவனக் குறைவு காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை திறமையாக ஆற்ற ஆன்மீக ஈடுபாடு சிறந்தது.

உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்குமிடையே தன்னம்பிக்கை நிலை குறையும்.

நிதி நிலை வளர்ச்சி சற்று குறைவாக இருக்கும். உங்கள் செலவைக் குறைக்க சிறந்த திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும்.

உடல் ஆரோக்கியத்தில் சிறிது பாதிப்பு இருக்கும். உங்களுக்கு முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

## கன்னி

இன்றைய நாள் முன்னேற்றத்திற்கு உகந்த நாள் அல்ல. உங்கள் அணுகுமுறையில் யதார்த்தம் தேவை.

உங்கள் பணிகளை மேற்கொள்ள பொறுமை அவசியம். பணிச்சுமையும் அதிகமாக காணப்படும்.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்டு உங்கள் துணையுடன் சண்டையிடுவீர்கள்.உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இத்தகைய போக்கை தவிர்க்க வேண்டும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். அதிகரிக்கும் செலவுகள் கவலையை அளிக்கும்.

தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. அமைதியாக கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது.

## துலாம்

இன்று இனிமையான தருணங்கள் காத்திருக்கின்றன. பொழுதுபோக்கு நிகழ்ச்சியில் பங்கு பெறுவதன் மூலம் நீங்கள் பதட்டத்திலிருந்து விடுபடலாம்.

உங்கள் பணியைப் பொறுத்த வரை சுய வளர்ச்சிக்கு உற்சாகமான நேரம். புதிய முயற்சிகளும் சாத்தியம்.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு திருமணத்திற்கு செல்வீர்கள். இருவரும் உற்சாகமாக நேரத்தை கழிப்பீர்கள்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் குடும்பத்துடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

சிறந்த மன உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் திருப்தியாக உணர்வீர்கள்.

## விருச்சிகம்

இன்றைய நாள் மிகவும் அற்புதமான நாள். இன்று உங்களிடம் அதிக ஆற்றலும் உறுதியும் காணப்படும்.

பணியில் உங்கள் முயற்சிக்கு வெற்றி கிட்டும். நீங்கள் தன்னம்பிக்கையுடன் பணிகளை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்சிகள் நடைபெறக் காண்பீர்கள்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். நிதியில் ஸ்திரத் தன்மை பெறுவீர்கள்.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. உறுதியான போக்கு காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 21.10.2023




புத்திசாலித்தனம் மற்றும் சமநிலை அணுகுமுறை வெற்றிக்கு வழிகாட்டும். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பணியில் மிதமான முன்னேற்றம் காணப்படும். நேரப்படி பணிகளை செய்வதன் மூலம் திறமையாக பணியாற்ற முடியும்.

நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சுமாராக இருக்கும். பணத்தை கவன மாகச் செலவு செய்யவும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. அமைதியாக இருந்து பதட்டத்தை தவிர்ப்பதன் மூலம் ஆரோக்கி யத்தை பராமரிக்கலாம்.




உங்கள் விருப்பங்கள் இன்று நிறை வேறும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

சக பணியாளர்கள் உதவிகரமாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள். பணியைப் பொறுத்தவரை நீங்கள் திறம்பட பணி யாற்றி உங்கள் செயல்திறனை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர் கள். இதனால் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

பணம் அதிக அளவில் காணப்படும். சுப நிகழ்சிக்காக பணத்தை பயன் படுத்தலாம்.

நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் ஆரோக் கியம் சிறப்பாக இருக்கும்.




நீங்கள் உற்சாகமாகவும் ஆற்ற லுடனும் இருப்பது நல்லது.பலன் களை எதிர்பாராது செயால்பட்டால் வெற்றி கிடைக்கும்.

பணியிடச் சூழல் உங்களுக்கு உகந்ததாக இருக்காது. அதிகப் பணிகள் மற்றும் அசௌகரியங்கள் உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

நீங்கள் எந்த விஷயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். சிறிய விஷயத்திற்கு வருத்தப் படுவது உறவை பாதிக்கும்.

உங்கள் வீட்டின் முன்னேற்றத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் அதிக செலவு ஏற்படும். நெருங்கிய சொந்தங்களுக்காக பணம் செலவு செய்வீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது சிறந்தது.




பொதுவில் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். உங்களுக்கு பயன் தரும் முடிவுகளை நீங்கள் இன்று எடுக்கலாம்.

நீங்கள் உங்கள் இலக்குகளை அமைத்து அதனை அடைவீர்கள். புதிய வாய்ப்புகள் உங்களுக்கு கிடைப்பதற் கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் அன்பாக மகிழ்ச்சியாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு வளரும்.

உங்கள் கையிலுள்ள பணம் உங்களுக்கு போது மானதாக இருக்கும். அதில் சிறிது பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.





